## தெவிநுவர பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 07 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தெவிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 355,971 இற்கான மூலதனச் செலவுகள் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக செலவிடப்பட்ட தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 23 பர்சஸ் காணியின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) இரண்டு செயற்திட்டங்களுக்காக வேலை பிரேரணைகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மதிப்பீடு தயாரித்தல் அல்லது ஏற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது உடன்படிக்கை மேற்கொள்ளல் என்பன நடைபெற்றிருக்கவில்லை. எனினும் அதற்காக ரூபா 5,000,000 கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரின் பெறுமதி அதே தொகையால் மிகைக் கணிப்பீடு ஏற்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அபரெகுகம பிரதான பாதையின் ருக்கஹ சந்தியில் பக்கச் சுவர் கட்டும் நிர்மாண வேலைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 1,000,000 ஆக காணப்பட்டதுடன் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 200,000 தொகை என

அவதானிக்கப்படாதமையால் கடன்கொடுத்தோருக்காக ரூபா 800,000 தொகை ஒன்று மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நபர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 818,567 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி ரூபா 1,118,567 என கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் கடன்கொடுத்தோர் ரூபா 300,000 தொகையினால் மிகைக் கணக்கீடு ஏற்பட்டுள்ளது.

(ஊ) சபைக்குச் சொந்தமான இலக்கம் 1-0039-01-3808-8 கொண்ட தேசிய சேமிப்பு கணக்கு வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ஆகிய ரூபா 24,195 தொகை கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,134,786 ஆக காணப்பட்டதுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மற்றும் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 494,855 ஆக காணப்பட்டமையால் ரூபா 4,639,931 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,042,575 ஆகும்.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,108,386 ஆகும்.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காசு மாற்றல் கணக்கில் காணப்படும் ரூபா 821,995 இற்கான தொகை 2008 ஆண்டு முதல் தொடர்ந்தும் முன் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதனை மீளாய்வாண்டிலும் தீர்த்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 66,413,135 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு அங்கீகரித்த செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 217 - 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறு செய்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 15,479,190 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,261,579 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த மதிப்பிட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயங்கள் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| வீதவரி | 3,801 | 3,806 | 3,130 |
| வாடகை | 15,689 | 16,837 | 9,174 |
| ஏனைய வருமானங்கள் | 16,202 | 12,987 | 7,698 |

2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் போது பில் போடப்பட்டிருந்த வீத வரி ரூபா 1,964,721 ஆக காணப்பட்டதுடன் அத் தொகையில் ஆண்டின் போது அறவீடு செய்திருந்த தொகை ரூபா 888,681 மாத்திரம்

என்பதனால் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 59 ஆகும். மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வீத வரி ரூபா 1,171,321 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 563,113 தொகையொன்று அறவிடப்பட்டிருந்ததுடன் அறவீடுகளின் முன்னேற்றம் நூற்றிற்கு 20 ஆகும்.

2.2.3 வாடகை

----------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட வாடகை ரூபா 215,898 ஆகும். அத்துடன் மீளாய்வாண்டின் போது பில்போடப்பட்ட தொகை ரூபா 6,114,556 ஆகும். மீளாய்வாண்டின் போது மொத்த பெறுவனவுகள் ரூபா 4,177,982 ஆக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 68 ஆகும்.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு

| | | ரூபா. |
|---|---|---|
| (அ) | நீதி மன்றத் தண்டப் பணம் | 15,710,989 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 367,111 |

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------------------

2015 மார்ச் 31 திகதிய இலக்கம் 08/2005 கொண்ட பொது நிருவாக செயலாளரின் சுற்று நிருபத்தின் பந்தி 11.5 இன் பிரகாரம் ஆதனக் கடன்களுக்கான கடன் மற்றும் வங்கி வட்டி விகிதாசாரம் மற்றும் அலுவலர்களிடம் அறவிடப்படும் நூற்றிற்கு 4.2 இற்கான வட்டி இடையிலான வித்தியாசம் அரசினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டும். அவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்காக ரூபா 949,047 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தியிருந்த போதிலும் அப் பணத்தினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொது மக்கள் வரவேற்பு தொடர்பாக அல்லது பொதுவாக முக்கியத்துவமுடைய நிகழ்வு ஒன்று தொடர்பாக சபை நிதியில் இருந்து ரூபா 1,000 விட கூடுதலான தொகையொன்று செலவிடப்படின் அதற்காக தொடர்புடைய அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும் அவ்வாறு பூர்வாங்க அங்கீகாரம் இன்றி பிரதேச சபையினால் 2014 ஆண்டின் போது ரூபா 108,023 இற்கான கொண்டாட்ட செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

-------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான இலக்கம் 1-0039-01-3808-8 கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் வங்கிக் கணக்கு 2005 மே 30 திகதி ரூபா 22,400 இனால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2007

ஆகஸ்ட் 29 திகதியில் உள்ளவாறு ரூபா 24,195 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் அதன் பின்னர் கணக்கினை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை.

3.4 செயற்திட்டங்களை கைவிடல்

---------------------------------------------------

போமுரே பன்சல அண்மையில் இருந்து வாடிகல சுனாமி கிராமம் வரையான பாதையை தார் போட்டு அபிவிருத்தி செய்வதற்காக சங்கம் ஒன்றிற்கு 2014 ஆகஸ்ட் 11 திகதி ரூபா 2,000,000 தொகை பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் கால நீடிப்பு இன்றி கைவிடப்பட்டிருந்ததென 2015 ஜூன் 22 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

3.5 மனித வள முகாமைத்துவம்

------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் ஆளணிக் கோப்பு பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| புதவியின் வகை | அங்கீகரிக் கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று | 03 | 03 | - | - |
| இரண்டாம் தரம் | 21 | 19 | 02 | - |
| ஆரம்ப தரம் | 44 | 31 | 13 | - |
| பிரதியீட்டு | - | 14 | - | 14 |
| | 68 | 67 | 15 | 14 |

(i) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி ஆணையாளரினால் பதவியணி சம்பளம் மற்றும் மந்திரிமார் படியாக ரூபா 17,154,500 தொகையொன்று மீளளிப்பு செய்திருந்ததுடன் ஆண்டின் போது சம்பளம் மற்றும் மந்திரிமார் படியாக ரூபா 241,851,869 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 7,697,369 இற்கான தொகையொன்று மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ii) 2002 ஜனவரி 03 திகதிய இலக்கம் 14 கொண்ட முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 14 இன் பிரகாரம் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய முகாமைத்துவச் சேவை சுற்று நிருப இலக்கம் 28 இன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது வேறேதேனும் அடிப்படையாக மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவித்திருந்த போதும் சபை 2014 ஆண்டின் போது 14 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 2,967,595 தொகை ஒன்று செலுத்தப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுமையும்

------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த பாதீட்டின் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகள் ஆண்டிற்கான உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளிடையே ஒப்பீடு செய்யும் போது பாதீடு பலன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

---------------------------------------------------------------------------

சபை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமைத்திருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு